# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101993

1. District மாவட்டம் : Madurai   PS: காவல்நிலையம் VACL   Year: ஆண்டு 2025   FIR No.: மு.த.அ. எண் 04/25   Date: நாள் 15.04.2025

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7(a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018.

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை 11.04.2025 at about 11:30 hrs

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.04.2025   Time : நேரம் 09:00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.04.2025   Time : நேரம் 09:30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்   VAO office Katchirayanpatti, 40 kms, North.

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Malaichelvam   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Raju

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 17-03-76   (d) Nationality நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் Ex. Army Officer   (g) Address : முகவரி 11 b A, Kottaipatti Thumbaipatti (P.O), Melur Taluk, Madurai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Duraipandi, Village Administrative Officer, Katchirayanpatti, Melur Taluk, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets Attached
Pages 3 to 5

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant [signature] 15/4/25
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature]
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 15.04.25 10:10 hrs AM
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P.T. RAJESH PRABHU
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
V K AC
Madurai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 15.04.2025-ஆம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா, தும்பைப்பட்டி போஸ்ட், கோட்டைப்பட்டி, கதவு எண்.116A-ல் வசிக்கும் ராமு மகன் திரு.R.மலைச்செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் : R.மலைச்செல்வம், த.பெ. ராமு, கதவு எண்.116A, கோட்டைப்பட்டி, தும்பைப்பட்டி போஸ்ட், மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் கோட்டைப்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் முன்னாள் இராணுவ அதிகாரி ஆவேன். என்னுடன் எனது அப்பா மற்றும் எனது அம்மா பத்மினி ஆகியோர்கள் உள்ளார்கள். எனது அப்பா ஓய்வு பெற்ற தபால் அலுவலர் ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு தங்கை மற்றும் ஒரு தம்பி உள்ளார்கள். அவர்கள் திருமணம் ஆகி வெளியூரில் உள்ளார்கள். எனது அப்பா மற்றும் அம்மா பெயரில் கோட்டைப்பட்டியில் பூர்வீக சொத்து 12 இடங்களில் சர்வே எண்கள். 291/4C, 5D, 313/10, 314/4A, B, 2A, 4B, 5, 323/7B, 324/8B, 342/7, 9 பிரகாரம் மொத்தம் சுமார் 1 ஏக்கர் 65 செண்ட் இடம் உள்ளது. அதனை எங்கள் குடும்பத்திற்குள் பேசி முடிவு செய்து எனது பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆக கடந்த 27.03.2025ம் தேதியன்று கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.964/2025 பிரகாரம் பதிவு செய்து கொடுத்தார்கள். கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகம் மூலம் எனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய கச்சிராயன்பட்டி கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிந்ததன்பேரில் கடந்த 07.04.2025ம் தேதியன்று கச்சிராயன்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பணிபுரியும் எங்கள் ஊரைச் சேர்ந்த கார்த்திக் என்பவர் மூலமாக கச்சிராயன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.துரைபாண்டி அவர்கள் எனது பெயரில் பட்டா மாறுதல் செய்து தருவது சம்மந்தமாக அவரை VAO அலுவலகத்திற்கு வந்து சந்திக்கும்படி கூறியதாக கார்த்திக் என்னிடம் தெரிவித்தார். எனக்கு வேலை இருந்ததால் VAO-வை சந்திக்க இயலவில்லை. பின்பு நான் கடந்த 11.04.2025ம் தேதியன்று பகல் சுமார் 11.30 மணிக்கு கச்சிராயன்பட்டி VAO அலுவலகத்திற்கு சென்று அங்கு இருந்த VAO திரு.துரைபாண்டி அவர்களை சந்தித்து என்னை அறிமுகபடுத்திக் கொண்டேன். உடனே அவர் என்னிடம் எனது இடத்திற்கான பட்டா மாறுதல் சம்மந்தமாக தான்தான்

கார்த்தியிடம் தகவல் தெரிவித்ததாக கூறி எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் எண்.964/2025-ன் நகலை என்னிடம் பெற்றுக்கொண்டார். மேலும் அவர் என்னிடத்தில் எனது அம்மா பெயரில் உள்ள சொத்தின் மூலப்பத்திரம் மற்றும் எனது அப்பாவிற்கு எனது பெரிய தாத்தா அய்யங்காளை மூலமாக கிடைக்க பெற்ற சொத்திற்கான வாரிசு சான்றிதழின் நகல்களை தருமாறு கேட்டார். அது எனது வீட்டில் உள்ளது என்று அவரிடம் தெரிவித்தேன். மேலும் அவர் எனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.10,000/- செலவாகும் என என்னிடம் தெரிவித்தார். நான் அதற்கு அவரிடம் ரூ.10,000/- அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையா என கேட்டேன். அதற்கு அவர் இல்லை நான் உங்களது பட்டா மாறுதலுக்கு சிபாரிசு செய்து அதனை விரைவில் பெற்றுத்தா நீங்கள் எனது சொந்த செலவிற்கு கொடுக்க வேண்டிய பணம் என தெரிவித்தார். நான் அவரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என தெரிவித்தேன். அதற்கு அவர் சரி உங்களுக்காக ரூ.3,000/-த்தை குறைத்து கொள்கிறேன், நீங்கள் ரூ.7,000/-த்துடன் நான் கேட்ட ஆவணங்களின் நகல்களை எடுத்துக்கொண்டு 15.04.2025ம் தேதி காலையில் வந்து என்னிடம் கொடுங்கள், நான் உங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு சிபாரிசு செய்து அதனை உடனடியாக கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என கண்டிப்பாக கூறினார். நான் சரியென கூறிவிட்டு எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு இலஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. நான் யோசித்து பார்த்ததில் தனது அரசாங்க வேலையை செய்ய இலஞ்சம் கேட்கும் VAO-விற்கு இலஞ்சமாக பணம் கொடுக்க மனம் வரவில்லை. அதனால் இப்புகாரை தங்களிடம் கொடுக்கிறேன். எனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக சிபாரிசு செய்து அதனை கிடைக்க ஏற்பாடு செய்துதர என்னிடம் இலஞ்சமாக பணம் ரூ.7,000/- கேட்கும் கச்சிராயன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.துரைபாண்டி என்பவர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும்படி இம்மனுவை கொடுக்கிறேன். இத்துடன் எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.964/2025, எனது அம்மா திருமதி.பத்மினி அவர்களது பெயரில் பதிவு செய்யப்பட்ட கருங்கலக்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1192/1999, எனது பெரிய தாத்தா திரு.அய்யங்காளை என்பவர் பெயரில் உள்ள மாண்புமிகு மேலூர் நீதிமன்ற நடுவர் B&D No.1612/2015-ஆகியவற்றின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும்,

கச்சிராயன்பட்டி கிராம நிர்வாக அலுவர் திரு.துரைபாண்டி என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.7,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** R.Malai Chelvam), 15.04.2025.

**Sir, Received the typed complaint on 15.04.2025 at 09.00 am the genuineness of the complainant and the accused were verified through sources. The complainant is found to be genuine however, the integrity and antecedents of the accused is found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption wing, Chennai and registered a case in Madurai Vigilance and Anti Corruption Cr. No. 04/2025 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.30 am and took up investigation. Sd./-XXXXXX (P.M. Ramesh Prabhu) 15.04.2025, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. R.Malai Chelvam, S/o. Ramu, Door No.116A, Kottaipatti, Thumbaipatti Post, Melur Taluk, Madurai District along with copy of Dhana Settelement deed No. 964/2025 and Sale deed No.1192/1999 of Karungalakkudi Sub-Registry, copy of B&D No.1612/2015 order by the Hon'ble Judicial Magistrate Court, Melur are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

**(P.M. Ramesh Prabhu)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**

15/04/2025